# <u>DEPOSITION OF WITNESS</u>
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : | STC.No. 662/2019 |
| Deposition of Witness for | : | பு.சா.1 |
| **Name** | : | **எஸ்.பாலமுருகன்** |
| **Father/Husband Name** | : | **செங்கோடன்** |
| **Village** | : | **மஞ்சக்கல்பட்டி** |
| **Taluk** | : | **சங்ககிரி** |
| **Calling** | : | **விவசாயம்** |
| **Religion** | : | **இந்து** |
| **Age** | : | **52** |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.09.2022

**<u>10.09.2022 – முதல் விசாரணை :</u>**

இவ்வழக்கில் நான் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பு முதன்மை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக இத்துடன் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடைதுதான். எனது பிரமாண வாக்குமூலத்தை ஏற்று, அதனுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(06.07.2018 -ம் தேதியிட்ட ICICI வங்கியின் அசல் காசோலை ( எண். 019832) **பு.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.07.2018 -ம் தேதியிட்ட தமிழ்நாடு மெர்கன்டையல் வங்கி, சங்ககிரி கிளையின் அசல் கலெக்சன் ஸ்லீப் **பு.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.07.2018 - ம் தேதியிட்ட தமிழ்நாடு மெர்கன்டையல் வங்கி, சங்ககிரி கிளையின் அசல் ரிட்டன் மெமோ **பு.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.07.2018- ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது அலுவலக நகல் **பு.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.07.2018 ம் தேதியிட்ட எதிரி வாங்க மறுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அஞ்சலக உரை **பு.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்குவிசாரணை:

எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/- Balamurugan

Sd/- S.R.Babu 10.09.2022,
Judicial Magistrate No.1, Sankari.